செய்தி வெளியீடு எண் : 083 நாள் : 11.01.2024

# செய்தி வெளியீடு

இன்று (11.01.2024) தாட்கோ தலைமை அலுவலகத்தில் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி.என்.கயல்விழி செல்வராஜ் அவர்களது தலைமையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் வெளியிடப்பட்ட, பல்வேறு அறிவிப்புகளின் தற்போதைய நிலை குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

முதலாவதாக சென்னை, இந்திய தொழில்நுட்ப கழகம் மற்றும் போயிங் நேஷனல் ஏரோ மாடலிங் நிறுவனம் இணைந்து நடத்திய தென் மண்டலங்களுக்கு இடையேயான தேசிய ஏரோ மாடலிங் போட்டியில் கலந்து கொண்டு மண்டல அளவிலான தகுதித் தேர்வில் வெற்றி பெற்று, தேசிய அளவில் இறுதி சுற்றில் பங்குபெற உள்ள ஆதிதிராவிடர் நலப் பள்ளி மாணவியர் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ் அவர்களிடம் வாழ்த்து பெற்றனர்.

அடுத்ததாக, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் இவ்வரசு பொறுப்பேற்றது முதல் தற்போது வரை வெளியிடப்பட்ட பல்வேறு அறிவிப்புகளின் செயலாக்கம் குறித்து தற்போதைய நிலையினை ஆய்வு செய்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னேற்றத்தில் இருந்து வரும் பணிகளை விரைந்து முடிக்குமாறும் திட்டங்களை மாணாக்கர்கள் மற்றும் பயனாளிகளின் பயன்பாட்டிற்கு கொண்டு வர விரைந்து செயலாற்றுமாறும் அறிவுறுத்தினார்கள்.

மேலும், துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் அவற்றின் செலவின விவரங்கள் குறித்து ஆய்வு செய்த, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நலத்திட்டங்கள் பயனாளிகளுக்கு விரைந்து சென்றடைவதையும், துறைக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி முழுமையாக மக்களின் நலனுக்காக செலவிடப்படுவதையும் உறுதி செய்திடுமாறும் அறிவுறுத்தினார்கள்.

இக்கூட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு செயலாளர் திருமதி. க. லட்சுமி பிரியா இ.ஆ.ப., ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் திரு. T. ஆனந்த் இ.ஆ.ப., தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.க.சு.கந்தசாமி. இ.ஆ.ப., பழங்குடியினர் நலத்துறை இயக்குநர். திரு. அண்ணாதுரை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in